[26th December 1956

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இதற்காக 30 ஆயிரம் ரூபாய் சர்க்கார் ஸாங்ஷன் செய்தது. இதை கன்ஸெஷன் வகையில் 30 ஆயிரம் ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri K. T. RAJU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது வெளிநாடுகளில்தான் நடந்து வருவதாக சொன்னார்கள். வடநாட்டில் ஐக்கிய மாகாணத்தில் இந்த மாதிரி விமானத்தில் மருந்து தெளித்திருக்கிற விபரம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அதை என் நமது மாகாணத்திலும் பரீட்சை செய்து பார்க்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Sri S. DAIVASIGAMONEY : It is not sufficient, Sir, if only insecticides are supplied to farmers; but proper sprayers also must be supplied. It is reported that sprayers are not available when they are required. May I know whether there are sufficient sprayers which can be distributed to the farmers in Tanjore district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have answered the position in Tamil already.

**Sri S. VADIVELU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் அதிகமாகவும் பெரிய மிராசுதார்களுக்கும் பெரிய நிலச்சுவான்தார்களுக்கும்தான் கிடைத்து வருகிறது. ஆதலால் இதர சாதாரண சாகுபடியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அதிகமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் வழி செய்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் மிராசுதார்கள் என்றும் சாகுபடியாளர்கள் என்றும் உள்ள வித்தியாசம் சர்க்காரைப் பொறுத்தமட்டில் இல்லை.

*Total cost on account of Non-gazetted Government Officers*

9–20 a.m. * 418 Q.—Sri P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of salary, dearness allowance and house-rent allowance paid to different categories of Non-gazetted Government Officers each separately?

The Hon. Sri C. SUBRAMANIAM : The cost on account of the pay and allowances of the Non-gazetted Government servants is as shown below :—

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| Pay ... ... ... ... ... ... | 970 |
| Dearness allowance ... ... ... ... | 350 |
| House-rent allowance ... ... ... ... | 56 |

The figures are approximate.

The compilation of separate figures for the different categories of Non-gazetted Government servants as required in the question will involve much labour and time. The figures for last grade employees alone are given in answer to a separate question by the same hon. Member. The figures now given relate to the State of

26th December 1956]

Madras prior to its reorganization from 1st November 1956 and do not take into account the enhancement in dearness allowance sanctioned from 1st November 1956 at a cost of about Rs. 80 lakhs per annum for Non-gazetted Government servants alone.

Sir, with your permission, I shall answer the next question also.

DEPUTY SPEAKER : Yes.

*Total cost on account of last grade employees*

* 419 Q.—Sri P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of salary, dearness allowance and house-rent allowance paid during 1955–56 to the last grade employees in the State, each separately?

The Hon. Sri C. SUBRAMANIAM : The total amount of pay and allowances paid during 1955–56 to the last grade employees in the State is as follows :—

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| Pay ... ... ... ... ... ... | 66 |
| Dearness allowance ... ... ... ... | 56 |
| House-rent allowance ... ... ... ... | 13 |

The figures are only approximate.

**Sri V. BALAKRISHNAN :** பஞ்சப்படி, வீட்டு அலவன்ஸ் முதலியவைகள் கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கும்போது ஒவ்வொரு ரகமாகப் பிரித்து அப்படி கொடுக்கப்படுகிறதா ? ஏனென்றால் திருச்சியில் கிரிமினல் கோர்ட், சிவில் கோர்ட்டுகளில் வேலை பார்க்கும் காப்பிஸ்டுகளுக்கு வீட்டு அலவன்ஸ் கொடுப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மற்ற இடங்களில் வேலைபார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. அதனால் கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களில் ஒரு இடத்தில் ஒரு விதமாகவும் மற்றொரு இடத்தில் மற்றொரு விதமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** வீட்டு அலவன்ஸ் சில நகரங்களில் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. எல்லா நகரங்களுக்கும் கொடுக்கப்படுவது இல்லை. ஒரு நகரத்தில் இருக்கக் கூடிய எல்லா ரகத்தவர்களுக்கும் இருக்கிறமாதிரி அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம்.

**Sri M. KALYANASUNDARAM :** கனம் மந்திரி அவர்களுக்கு விவரம் ஞாபகத்தில் இல்லை என்று நினைக்கிறேன். வீட்டு வாடகை அலவன்ஸ் எல்லா நகரத்திலும் காபிஸ்ட்டுகளுக்கு கிடையாது என்பது கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகத்தில் இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் கனம் மந்திரி அவர்கள் தங்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதாவது—

Copyists and Examiners in Criminal Courts will be put on regular scales of pay instead of being paid on the basis of piece-work.

இதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.